16-07-2023 காலை முரளி ஓம் சாந்தி "அவ்யக்த பாப்தாதா" ரிவைஸ் 07.03.1995

பிராமணன் என்றால் தர்ம சக்தி மற்றும் சுய இராஜ்ய சக்தியின் அதிகாரி ஆத்மா

இன்று பாப்தாதா நாலாபுறங்களிலும் உள்ள குழந்தைகளிடம் விசேஷமாக இரண்டு சக்திகளை பார்த்துக் கொண்டிருக்கின்றார். அந்த இரண்டு சக்திகள் ஒன்று தர்மசக்தி, இரண்டாவது சுயராஜ்ய சக்தி. பிராமண வாழ்க்கையின் விசேஷதா - இந்த இரண்டு சக்திகளும் ஒவ்வொரு வருக்கும் பிராப்தியாக கிடைக்கிறது. தர்மசக்தி என்றால் சத்தியம், தூய்மையின் தாரணை சொரூபமாகும். சுயராஜ்ய சக்தி என்றால் அதிகாரி ஆகி அனைத்து கர்மேந்திரியங்களையும் கட்டளைப்படி நடத்துவதாகும். சுயராஜ்ய அதிகாரி அல்லது சுயராஜ்ய சக்தியுடையவர்கள் எந்த ஒரு பிரச்சனை, இயற்கை மற்றும் மாயாவின் அனைத்து சொரூபங்களுக்கும் அடிமை ஆக மாட்டார்கள், அதிகாரியாக இருப்பார்கள். ஒவ்வொரு பிராமண ஆத்மாவிற்கும் பாப்தாதா இந்த இரண்டு சக்திகளையும் பிராப்தியாக கொடுத்திருக்கின்றார் அல்லவா? அனைவரிடத்திலும் இந்த இரண்டு சக்திகளும் இருக்கிறதா? அல்லது இன்னும் முழுமையாக கிடைக்கவில்லையா? இப்பொழுது இரண்டு சக்திகளையும் பிராப்தியாக அடைபவர்கள் தான் எதிர்காலத்தில் தர்மம் மற்றும் இராஜ்ய சக்திக்கு அதிகாரிகளாக ஆகின்றனர். இரண்டு சக்திகளையும் தாரணை செய்திருக்கிறீர்களா? தனது சித்திரத்தை பார்த்தீர்களா? இரட்டை அயல் நாட்டினரின் சித்திரம் இருக்கிறதா? அல்லது மற்றவர்களின் சித்திரம் இருக்கிறதா? அந்த சித்திரத்தில் இரண்டு சக்திகளின் அடையாளங்களும் பார்த்தீர்களா? இரண்டு சக்திகளையும் இந்த நேரத்தில் தாரணை செய்கிறீர்கள். அரை கல்பம் இரண்டு சக்திகளும் உங்கள் அனைவரின் கைகளில் இருக்கிறது. துவாபர யுகத்தில் பார்த்தீர்கள் எனில் தர்ம சக்தி தனியாக பிரிந்து விட்டது, இராஜ்ய சக்தி தனியாக பிரிந்து விட்டது. எனவே தர்ம பிதாக்கள் வர வேண்யிடிருந்தது. ஆக தர்மபிதா மற்றும் இராஜ்யம் இரண்டும் தனித்தனியாக இருந்தது. ஆனால் உங்களது இராஜ்யத்தில் பிரிந்திருக்குமா என்ன? ஒவ்வொருவரிடத்திலும் இரண்டு சக்திகளும் சேர்ந்தே இருக்கும். ஆகையால் அகண்ட நிர்விக்ன இராஜ்யம் நடைபெற்றது. ஆக ஒவ்வொருவரும் தனக்குள் எந்த அளவிற்கு இந்த இரண்டு சக்திகளையும் தாரணை செய்திருக்கின்றனர்? எந்த அளவிற்கு அதிகாரி ஆகியிருக்கின்றனர்? என்பதை பார்த்துக் கொண்டிருந்தார். சதா அதிகாரியாக இருக்கின்றீர்களா? அல்லது சில நேரங்களில் அடிமை, சில நேரங்களில் அதிகாரியாக இருக் கிறீர்களா? அவ்வப்பொழுது அதிகாரியாக இருக்கிறீர்களா? அவ்வப்பொழுது அடிமையாக ஆகி விடுவது நன்றாக இருக்குமா? அல்லது சதா அதிகாரியாக இருப்பது நன்றாக இருக்குமா? சதா அதிகாரியாக இருக்க வேண்டுமா? அல்லது சிறிது நேரம் இருந்தால் போதுமா? சுயம் தந்தை அதிகாரம் கொடுக்கின்றார், கொடுப்பவர் கொடுத்துக் கொண்டிருக்கின்றார், பெறுபவர்கள் என்ன செய்ய வேண்டும்? பெறுவது எளிதா? அல்லது கொடுப்பது எளிதா? பெறுவதில் எந்த கடினமும் கிடையாது தானே? கொடுப்பதில் கொடுக்கவா? வேண்டாமா? சிறிது கொடுக்கலாமா? அதிகம் கொடுக்கலாமா? என்று யோசனை வரும். ஆனால் பெறுவதில் எவ்வளவு கிடைத்தாலும் அவ்வளவு எடுத்துக் கொள்ள வேண்டும்

என்று தான் அனைவரும் கூறுவர். ஆக பெறுவதில் நம்பர் ஒன்னாக இருக்கிறீர்களா? அல்லது இரண்டாம் நம்பரில் இருக்கிறீர்களா? இதில் யாரும் இரண்டாம் நம்பரில் வரமாட்டார்கள். ஆனால் கொடுக்கும் நேரத்தில் கொடுப்பதிலும் நம்பர் ஒன்னாக இருக்கிறீர்களா? அல்லது யோசிக்கிறீர்களா? தைரியம் வைக்க வேண்டியிருக்கிறது. உண்மையில் என்ன கொடுக்கிறீர்கள்? பிராமண வாழ்வில் கொடுக்கிறீர்களா? அல்லது பெறுகிறீர்களா? கொடுக்கும் பொருளை விட பெறும் பொருள் சிரேஷ்டமானது எனில் பெறுவது என்பதா? அல்லது கொடுப்பது என்பதா? கொடுக்க வேண்டியிருக்கிறது, கொடுக்க வேண்டும் - இவ்வாறு யோசித்தால் சுமையானவர்களாக ஆகிவிடுவீர்கள். பெற வேண்டும் எனும் போது சதா குஷியாக இருப்பீர்கள், தைரியமாக இருப்பீர்கள். கொடுக்கும் போது கொடுப்பது சிரமம் என்று யோசிப்பீர்கள். ஆனால் முதலில் பெற்றுக் கொண்டு பிறகு கொடுக்கிறீர்கள் எனில் ஒன்றும் சிரமம் இருக்காது. தந்தைக்கு கொடுக்குமளவிற்கு உங்களிடம் என்ன இருக்கிறது? கொடுப்பது என்றால் நல்ல பொருள் கொடுப்பீர்களா? அல்லது கெட்ட பொருளா? ஆக எது பிடிக்கிறது - உடல் நன்றாக இருக்கிறதா? மனம் நன்றாக இருக்கிறதா? செல்வம் நன்றாக இருக்கிறதா? உபயோகமற்றதாகும். மருந்துக்களின் ஆதாரத்தில் உடல் இயங்கிக் கொண்டிருக் கிறது. தள்ளு வண்டி பிடிக்குமா என்ன? ஆக பிராமண வாழ்க்கையில் பெறுவதே பெறுவதாகும். குழந்தைகள் தந்தையை விட சாமர்த்தியமாக இருப்பதைப் பார்க்கின்ற போது தந்தை புன்முறுவல் செய்கின்றார். முதலில் பெறுகிறீர்கள், பிறகு கொடுப்பதில் யோசிக்கிறீர்கள். புத்திசாலிகள் அல்லவா! நல்லது தான், குழந்தைகள் புத்திசாலிகளாக இருந்தால் தந்தைக்கு பிடிக்கும். ஆனால் போகப் போக ஒருவேளை சோம்பலில் வந்து விட்டால் நன்றாக இருக்காது. சில நேரங்களில் குழந்தைகளின் முகம் அந்த மாதிரி ஆகிவிடுகிறது என்ன ஆனது என்றே தெரியவில்லை. சரீரத்தில் இரத்தம் குறைந்து விட்டால் பலவீனம் ஆகிவிடுவார்கள் அல்லவா! முகத்திலும் பலவீனம் தென்படும். இங்கும் குஷி, சக்தி குறைந்து விடும் போது முகம் அந்த மாதிரி ஆகிவிடுகிறது அனைத்தையும் அறிவீர்கள், அனைவரும் அனுபவிகளாக இருக்கிறீர்கள். ஒருபுறம் குஷி என்ற பொக்கிஷம் கிடைத்திருக்கிறது என்று கூறுகிறீர்கள். அதுவும் அழி வற்றது. பிறகு எப்படி குறைந்து விடுகிறது? தந்தையிடம் உங்களது முழு நாளிற்கான மன நிலை (மூட்) மற்றும் மன நிலையினால் முகத்தில் ஏற்படும் மாற்றம் போன்ற அனைத்து சித்திரங்களும் அங்கு இருக்கிறது. நீங்கள் சித்திரங்களை அருங்காட்சியகமாக (மியூசியம்) உருவாக்குகிறீர்கள் அல்லவா! தந்தையிடம் உங்களது சித்திரங்களின் அருங்காட்சியகம் இருக்கிறது. எனவே சதா இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் - நான் பிராமண ஆத்மா, இராஜ்ய சக்தி மற்றும் தர்ம சக்திக்கு அதிகாரி ஆத்மா. இந்த நினைவில் நிச்சயம் இருந்தால் போதை இருக்கும். நிச்சயம் குறைந்தால் போதை குறைந்து விடும். ஆக இந்த சக்திகள் சதா கூடவே இருக்கிறதா? அல்லது அவ்வப்போது காணாமல் போய் விடுகிறதா? சில நேரம் வந்து விடுகிறதா? என்று சோதனை செய்யுங்கள். நல்லது.

இன்று இரட்டை அயல்நாட்டினர் அதிகமாக இருக்கின்றனர். பாப்தாதா விசேஷமாக இரட்டை அயல் நாட்டினரிடம் கேட்கின்றார் - முழு நாளும் தனது அதிகாரம் என்ற இருக்கையில் செட் ஆகியிருக்கிறீர்களா? அல்லது மிக விரைவாக அப்செட் ஆகிவிடுகிறீர்களா? அப்செட் ஆவது என்பது கடந்து போன விசயமாகும், இப்பொழுது ஆவது கிடையாது. கடந்து முடிந்து விட்டது

அல்லவா! இப்பொழுது ஆவது கிடையாது தானே! இப்பொழுது ஞானம் நிறைந்தவர்களாக, சக்தி நிறைந்தவர்களாக ஆகிவிட்டீர்கள். சிறிய விசயத்திற்கு அப்செட் ஆவது, முகம் மாறுவது, மனநிலை மாறுவது என்பது கூடாது. இவ்வாறு அவ்வப்பொழுது ஆகிறதா? அவ்வப்பொழுது அப்செட் ஆகிறீர்களா? நல்லது. அப்செட் என்பதையே மறந்து விட்டோம் என்று புரிந்து கொண்டவர்கள் கை உயர்த்துங்கள், அப்படிப்பட்ட சக்திசாலி ஆத்மாக்கள் ஒருபோதும் அப்செட் ஆகமாட்டார்கள். உண்மையை கூறிக் கொண்டிருக்கிறீர்கள், அதற்கு வாழ்த்துக்கள். இப்பொழுது இந்த சீசனில் எதையாவது விட்டுச் செல்வீர்களா? அல்லது அடைந்து செல்வீர்களா? மதுவனத் தில் அதிகபட்சம் சிவராத்திரி கொண்டாடி யிருக்கிறீர்கள் அல்லவா! யாருக்கு பிறந்த நாளோ அவருக்கு பரிசு கொடுப்பார்கள் தானே! ஆக தந்தைக்கு என்ன பரிசு கொடுத்தீர்கள்? அப்செட் ஆவதை பரிசாக கொடுத்து விடுங்கள். தைரியம் இருக்கிறதா? நல்லது, கை உயர்த்துங்கள், டி.வி - யில் அனைவரின் கைகளையும் காட்டுங்கள். யோசித்து-புரிந்து கொண்டு உறுதியாக கை உயர்த்துங்கள். அனைவரும் கை உயர்த்தியது போட்டோ எடுக்கப்பட்டிருக்கிறது. தங்களது போட்டோ எடுக்கப்பட்டு விட்டதைப் பாருங்கள். பாப்தாதாவிற்கு அந்த முகம் பிடிக்கவில்லை. ஒவ்வொரு குழந்தையையும் சதா மலர்ந்த ஆன்மீக ரோஜாவாக பார்க்க பாப்தாதா விரும்பு கின்றார். வாடியதாக அல்ல, மலர்ந்திருக்க வேண்டும். யார் மீது அன்பு இருக்கிறதோ அவர் களுக்கு எது பிடிக்குமோ அதையே செய்வார்கள். இரட்டை அயல்நாட்டினர் தந்தையின் மீது மிகுந்த அன்பு செலுத்துகின்றனர். எனவே தந்தைக்கு எது பிடிக்குமோ அதுவே உங்களுக்கும் பிடிக்கும் அல்லவா! என்ன செய்வது, விசயம் இப்படி இருந்தது, ஆகையால் அப்செட் ஆகிவிட்டேன் போன்ற செய்திகள் எதுவும் வரக் கூடாது. அப்செட் செய்யும் விசயம் ஏதாவது வந்தாலும் நீங்கள் அப்செட் ஸ்திதியில் வராதீர்கள். எப்படி ஊஞ்சலில் ஆடுகிறீர்கள் அல்லவா! அது மேலே-கீழே வரும். மிகவும் கீழே செல்லும், மிகவும் மேலே செல்லும், மிக வேகமாகவும் செல்லும் போது சரீரத்தை அப்செட் செய்யும் அல்லவா! ஆனால் நீங்கள் அப்செட் ஆகிறீர்களா என்ன? விளையாட்டு என்று புரிந்து கொள்ளும் போது அப்செட் ஆவதற்குப் பதிலாக மனதை மகிழ்விக்கக் கூடியதாக புரிந்து கொள்கிறீர்கள். என்ன காரணம்? விளையாட்டாகும். அதே போன்று அப்செட் செய்யும் விசயங்கள் ஏதாவது வந்தாலும், அவசியம் வரும், யாரெல்லாம் கைகளை உயர்த்தினீர் களோ அவர்களிடம் இன்னும் அப்செட் செய்யும் பெரிய விசயங்கள் வரும். ஏனெனில் மாயையும் முரளி கேட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் அதை விளையாட்டு என்று புரிந்து கொள்ளுங்கள், பயப்படாதீர்கள். ஊஞ்சல் ஆட்டுவிக்கிறது எனில் ஆட்டுவிக்க விடுங்கள். ஆனால் மனம் பயப்படக்கூடாது. ஞானம் நிறைந்தவர் களாக, சக்தி நிறைந்தவர் களாக ஆகிவிடுங்கள். அந்த இருக்கையை விட்டு விடாதீர்கள். இவர் அப்செட் ஆகக் கூடியவர் கிடையாது என்று மாயை ஒன்று-இரண்டு முறை பார்த்து விட்டால் அது சுயம் அப்செட் ஆகிவிடும், உங்களை அப்செட் செய்யாது. விசயங்களைப் பற்றி கொடுக்கல் வாங்கல் செய்யலாம். ஏதாவது விசயம் வருகிறது எனில் ஞானம் நிறைந்தவராக இருக்கின்ற காரணத் தினால் இது சரி, இது சரியல்ல, இது நடைபெற வேண்டும், இது நடைபெறக் கூடாது என்று புரிந்து கொள்கிறீர்கள் அல்லவா! ஆனால் விசயங்களைப் பற்றி கொடுக்கல்-வாங்கல் விசயம் என்ற முறையில் செய்யுங்கள், அப்செட் ரூபத்தில் செய்யாதீர்கள். ஒருபுறம் கூறிக் கொண்டே செல்வது, மறுபுறம் கங்கை-யமுனை பாய்ந்து கொண்டே இருப்பது.

மனதில் பாய்தாலும் சரி, கண் களின் மூலம் பாய்ந்தாலும் சரி. ஆனால் இரண்டும் இருப்பது சரியானது அல்ல. ஆக பரிசு கொடுப்பதற்கு தயாராக இருக்கிறீர்களா? யோசித்து சொல்கிறீர்களா? அல்லது சாதாரண மாக ஆம் என்று கூறி விட்டீர்களா?

பாப்தாதா மிக எளிய சப்தங்களில் யுக்திகளை கூறிக் கொண்டிருக்கின்றார் - எப்பொழுதெல்லாம் ஏதாவது பிரச்சனை அல்லது இயற்கை குழப்பத்தின் ரூபத்தில் வருகிறதோ, இரண்டு சப்தங்களை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். விதி என்னவெனில் முடியாது (நாட்) என்று கூறுங்கள் அல்லது புள்ளி வையுங்கள். முடியாது அல்லது புள்ளி. ஏதாவது ஒரு விசயம் தவறாக இருக்கிறது எனில் முடியாது அதாவது செய்யக் கூடாது என்று நினையுங்கள். யோசிக்கக் கூடாது, செய்யக் கூடாது, பேசக் கூடாது. புள்ளி வைத்து விட்டால் முடியாது என்று ஆகிவிடும். முடியாது என்று நினையுங்கள், புள்ளி வைத்து விடுங்கள். புள்ளி வைப்பதற்கு எவ்வளவு நேரம் ஆகும்? விநாடி விட குறைவு. ஆனால் நடப்பது என்ன? இது செய்யக் கூடாது, சரி கிடையாது என்று புரிந்திருந் தாலும் கூட புள்ளி வைக்க வருவது கிடையாது. ஞானம் நிறைந்தவர்களாக ஆகிவிட்டீர்கள், ஆனால் வெறும் ஞானம் நிறைந்தவர்கள் மட்டும் தேவை யில்லை. ஞானத்தின் கூடவே சக்திசாலியாகவும் இருக்க வேண்டும். ஆக சக்திசாலி ஸ்திதியில் பலவீனமாக இருக்கிறீர்கள். ஆகையால் புள்ளி வைக்க முடிவதில்லை. மேலும் யாருக்கு புள்ளி வைக்க வருகிறதோ, அவர்கள் தந்தையையும் மறக்க மாட்டார்கள், தந்தை புள்ளியும் நினைவில் இருக்கும். நீங்களும் புள்ளியாக இருக்கிறீர்கள். அனைத்தும் நினைவிற்கு வந்துவிடும். முற்றுப்புள்ளி. கேள்விக்குறி, ஆச்சரியக் குறி அல்லது கமா வைக்காதீர்கள். முற்றுப்புள்ளி வையுங்கள். முற்றுப்புள்ளி வைப்பது எளிதல்லவா! மற்றவைகள் கடினமானது. அனைத்தையும் விட கஷ்டமானது கேள்விக்குறி. அது வைப்பதற்கு எளிதாக வருகிறது. ஏன்? என்ற சப்தம் வரும் போது என்ன செய்ய வேண்டும் என்று கூறியிருக்கின்றேன் அல்லவா! பறந்து விடுங்கள் (பிளை). மேலே பறந்து சென்று விடுங்கள். பறக்க வருகிறதா? இரட்டை அயல் நாட்டினர்களில் நல்ல நல்ல இரத்தினங்கள் வெளிப்பட்டிருக்கின்றனர். அப்படிப்பட்ட இரத்தினங் களைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சியடைகின்றார். அந்த விலைமதிப்பற்ற இரத்தினத்திடம் துளியளவு கறை தென்பட்டாலும் அது நல்லதல்ல. இருப்பது சிறிய கறை தான், ஆனால் கறை என்று தான் கூறுவர் அல்லவா! விலைமதிப்பற்றவர் களாக ஆகிவிட்டீர்கள் எனில் பிறகு சிறிய கறை ஏன் வைத்திருக்க வேண்டும்? நன்றாக இருக்கிறதா என்ன? சந்திரனும் கருப்பாக ஆகிவிடுகிறது, ஆகையால் நல்லது தான் என்று நினைக்காதீர்கள். இரட்டை அயல் நாட்டினர் உதாரணமாக இருந்து காட்டுங்கள். துளியளவும் எந்த குறையும் இருக்கக் கூடாது. கறை ஏற்படுவதற்குக் காரணம் என்ன? கறை ஏற்பட வேண்டும் என்ற விருப்பம் கிடையாது, ஆனால் ஏற்பட்டு விடுகிறது. ஏன் ஏற்பட்டு விடுகிறது? மூல காரணத்தை அறிவீர்களா? அறிந்து கொள்வதில் புத்திசாலிகள் ஆவீர்கள். அறிந்தும் இருக்கிறீர்கள், தங்களுக் குள் கலந்துரையாடல் செய்யும் போது, பாப்தாதா கலந்துரையாடலையும் போட்டோ எடுக் கின்றார், அதிக காரணங்களை உருவாக்குகிறீர்கள் - இது காரணம், இது காரணம் மேலும் நல்ல நல்ல விசயங்கள் கலந்துரையாடலில் வெளிப்டுகிறது, ஆனால் செயலில் கொண்டு வருவது கிடையாது. தேக அபிமானத்தின் சூட்சும ரூபம் உருவாகிக் கொண்டே செல்கிறது. இப்பொழுது வெளிப்படையான

ரூபத்தில் தேக அபிமானம் வருவது கிடையாது. ஆனால் சூட்சுமம் மற்றும் ராயல் ரூபத்தில் வருகிறது. புத்தியை நன்றாக உபயோகிக்கிறீர்கள், நல்ல நல்ல விசயங்களை சிந்திக்கும் போது பாப்தாதா குஷி அடைகின்றார். ஆனால் விசயங்களை சிந்திக்கிறீர்கள், பிறகு சிறிது கூடுதலாக சேர்த்தல்-திருத்தம் செய்தால் நான் என்பது வந்து விடுகிறது. குஷியாக தனது கருத்தை கூறுவது போன்று பிறரது கருத்துக்களையும் குஷியுடன் ஏற்றுக் கொள்ளுங்கள். இது எப்படி நடக்கும், இது நடைபெறாது, இவ்வாறு நடக்க முடியாது என்று பயப்படாதீர்கள். தனது விசயத்திற்கு மரியாதை கொடுப்பது போன்று மற்றவர்களது கருத்து, மற்றவர்களது விசயத் திற்கும் அந்த அளவிற்கு மரியாதை கொடுங்கள். கருத்து தெரிவிப்பது தனி விசயம், உங்களுக்கு ஒருவரது கருத்து பிடிக்க வில்லை எனில் அதன் பாதிப்பில் வருவது, மனநிலையை மாற்றிக் கொள்வது என்பது சேவை கிடையாது. அனுசரித்துச் செல்ல வேண்டும். மற்றவர்களது கருத்தையும் தனது கருத்தாக நினைக்க வேண்டும்-புரிந்து கொள்ள வேண்டும். இது தான் பிறரது கருத்துக்கு மரியாதை கொடுப்பதாகும். இது எனது சிந்தனை, இது எனது கருத்து, காரியம் செய்தேன், எனது கருத்திற்கு மகத்துவம் இருக்க வேண்டும் என்று புரிந்து கொள்வது போன்று மற்றவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும். மற்றவர்களது கருத்தையும் தனது கருத்துடன் ஒன்றிணைக்க வேண்டும். ஆனால் அவ்வாறு ஒன்றிணைக்க வருவது கிடையாது. அது வேறு ஒருவரது கருத்து என்று புரிந்து கொள்கிறீர்கள். ஏனெனில் இப்பொழுது இரட்டை அயல்நாட்டினரும் சேவை களத்தில் திட்டம் தீட்டுவதில் நல்ல முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கிறீர்கள், அடைந்து கொண்டும் இருப்பீர்கள். ஆனால் அனுசரிக்கும் விசேஷதாவை பயன்படுத்துங்கள். ஒரு குழந்தை முன்னேறும் போது பாப்தாதா குஷியடை கின்றார். இவர் ஏன் முன்னேறுகின்றார் என்று நினைப்பது கிடையாது. யார் முன்னேறுகிறார்களோ மிகவும் நல்லது. ஆக இரட்டை அயல்நாட்டினர் மீது பாப்தாதாவிற்கு அன்பு இருக்கவே செய்கிறது. ஆனால் சேவையின் திட்டம் அல்லது சேவையில் நடைமுறையில் என்ன செய்கிறீர்களோ, செய்து கொண்டிருக்கிறீர்களோ அதன் மீது மிகுந்த மரியாதை இருக்கிறது.

இரட்டை அயல் நாட்டினர்களாகிய நீங்கள் இல்லையெனில் தந்தையின் ஒரு பட்டம் நடைமுறையில் நிரூபனம் ஆகியிருக்காது என்பதை பாப்தாதா முன்பே கூறியிருக்கின்றார். எந்த பட்டம்? விஷ்வ கல்யாணகாரி. இப்பொழுது பாருங்கள் - உலகில் நாலாபுறங்களிலும் தந்தையின் செய்தி கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா! இந்த சீசனில் நாலாபுறங்களி லிருந்தும் வந்திருக்கிறீர்கள் அல்லவா! மொத்தம் எத்தனை நாடுகளிலிருந்து வந்திருக்கிறீர்கள்? (58) முக்கிய நாடுகள் பாக்கி எத்தனை இருக்கிறது? (125) சிறிய சிறிய நாடுகள் அதிகம் இருக்கும், ஆனால் முக்கிய நாடு 125 பாக்கி இருக்கிறது. எனவே இப்பொழுது இரட்டை அயல்நாட்டினர்கள் அதிக காரியம் செய்ய வேண்டும். பாரதத்திலும் செய்ய வேண்டும், அயல்நாட்டிலும் செய்ய வேண்டும், இரண்டு இடத்திலும் செய்ய வேண்டும். சேவையில் சம்பூர்ன வெற்றிக்கான அடையாளம் என்னவெனில் எங்களுக்கு செய்தி கிடைக்கவில்லை என்று எந்த ஒரு ஆத்மாவும் கூறிவிடக் கூடாது என்பதை பாப்தாதா முன்பே கூறியிருக்கின்றார். செய்தி கொடுத்து விட்டோம், ஆனால் கேட்ட பின்பும் யாரும் தங்களது பாக்கியத்தை உருவாக்கிக் கொள்ளவில்லை எனில் அது

உங்களது பொறுப்பு கிடையாது. அது அந்த ஆத்மாவினுடைய தாகும். உங்கள் மீது எந்த புகாரும் வந்து விடக் கூடாது. மாஸ்டர் விஷ்வகல்யாணகாரி என்று கூறுகிறீர்கள் எனில் உலகில் நாலாபுறங்களிலும் செய்தி கொண்டு சேர்க்க வேண்டும். பாரதத்திலும் சேர்க்க வேண்டும், அயல்நாட்டிலும் சேர்க்க வேண்டும். வெற்றிக் கொடியை நீங்கள் ஏற்றும் பொழுது ஒரு ஆத்மா வந்து இந்த புகார் கூறினால் நன்றாக இருக்குமா? ஒருபுறம் நீங்கள் கொடி ஏற்றுகிறீர்கள், மற்றொரு புறம் மக்கள் புகார் கூறிக் கொண்டிருந்தால் நன்றாக இருக்குமா? நன்றாக இருக்காது அல்லவா! இரட்டை அயல்நாட்டினரிடம் தைரியம் நன்றாக இருக்கிறது, தந்தையின் மீது அன்பு இருக்கவே செய்கிறது. சேவையின் மீது அன்பு நன்றாக இருக்கிறது. இரண்டிலும் அன்பின் சான்றிதழ் நன்றாக இருக்கிறது. இப்பொழுது எந்த சான்றிதழ் பெற வேண்டும்? எந்த அளவு சேவாதாரியோ, அந்த அளவு சக்திதாரி. சக்தி சொரூபம் ஆகிவிட்டேன் என்ற சான்றிதழ் பெற வேண்டும். மெஜாரிட்டி ஆத்மாக்கள் தந்தை மற்றும் சேவையின் மீது அன்பு என்பதில் தேர்ச்சி அடைந்திருப்பதை பாப்தாதா பார்க்கின்றார். நல்லது.

நாலாபுறங்களிலும் தர்மசக்திக்கு அதிகாரி ஆத்மாக்களுக்கு, சதா சுவராஜ்ய சக்திக்கு அதிகாரி ஆத்மாக்களுக்கு, சதா இரண்டு சக்திகளுடைய, இரண்டு கிரீடதாரி சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா சர்வசக்திகளின் மூலம் சக்தி சொரூபத்தின் பிரத்ட்ச ரூபத்தை காண்பிக்கும் சக்திசாலி ஆத்மாக்களுக்கு, சதா இலட்சியத்தை இலட்சணத்தின் ரூபத்தில் காண்பிக்கக் கூடிய, அனுபவம் செய்விக்கக் கூடிய சக்திசாலி மகாவீர், ஆடாத-அசையாத ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

வரதானம் : திட சங்கல்பத்தின் மூலம் வீணானவைகள் என்ற வியாதியை சதா காலத்திற்கும் அழிக்கக் கூடிய வெற்றி மூர்த்தி ஆகுக.

வெற்றி மூர்த்தி ஆவதற்காக அனைத்து குழந்தைகளும் இந்த ஒரே ஒரு திட சங்கல்பம் செய்யுங்கள் - ஒருபோதும் வீண் சிந்தனை செய்யமாட்டேன், வீணானவைகளை பார்க்க மாட்டேன், வீணானவைகளை கேட்க மாட்டேன், வீணானவைகளை பேசமாட்டேன் மற்றும் செய்யமாட்டேன். சதா எச்சரிக்கையுடன் இருந்து வீணானவை களின் பெயர், அடையாளத்தை சமாப்தி செய்வேன். இந்த வீணானவைகள் என்ற வியாதி மிகவும் கொடியது, அது யோகி ஆவதற்கு விடாது. ஏனெனில் வீணானவைகள் என்பது விஸ்தாரம், விஸ்தாரத்தில் அலையும் புத்தியை கட்டுப்படுத்தும் சக்தியின் மூலம் சார சொரூபத்தில் நிலைக்கச் செய்யுங்கள், அப்பொழுது தான் சகஜயோகி, வெற்றி மூர்த்தி ஆவீர்கள்.

சுலோகன்: மற்றவர்களுக்கு சொல்- கற்றுக் கொடுப்பதற்குப் பதிலாக செய்து கற்றுக் கொடுப்பவர்களாக ஆகுங்கள்.